**ஒபெக் நிதியளிக்கப்பட்ட கொழும்பு தேசிய நெடுஞ்சலைகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டம் - 2023**

---

ஒபெக் நிதியளிக்கப்பட்ட கொழும்பு தேசிய நெடுஞ்சலைகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக இருந்ததுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பைச் சூழவுள்ள 13 பிரதான தேசிய வீதிகளின் 65.45 கிலோமீற்றர்களை தரமுயர்த்துதல் மற்றும் நரஹேன்பிட்டிய – நுகெகொட பாலத்தை மீளநிர்மாணித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,212.37 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 86.25 மில்லியனானதுடன் அதில் ரூபா 6,499.57 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கன ஒபெக் நிதியத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 திசெம்பர் 11 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2026 மே 12 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றின் குறிப்பு இல.03 இன் பிரகாரம் கொட்டாவ, தலகல வீதியின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்து 2022 சனவரி 12 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், அதன் பெறுமதி சிவில் பணிகளுக்கு மாற்றப்படாமல் இன்னும் நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே சிவில் பணிகள் அந்த தொகையால் குறைத்து காட்டப்பட்டுள்ளன. | 1,630.69 | பூர்த்திசெய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி எதிர்கால நிதிக்கூற்றுக்களில் சிவில் பணிகளின் கீழ் பதிவு செய்யப்படும். | கணக்காளர் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் உடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறை அல்லாத சொத்துக்கள் தொடர்புடைய ஆண்டிற்குக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டில் கொள்வனவுகளாக கருதப்பட்டு அதற்கிணங்க கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | 0.633 | மீளாய்வாண்டில், இந்த செயற்திட்டம் அந்தச் சொத்துக்களை கொள்வனவுகளாகக் கருதவில்லை அல்லது அவற்றை கொள்வனவுகளாக கணக்கீடு செய்யவில்லை. இந்த சீராக்கம் பிழை திருத்தமாக செயற்படுகிறது.<br><br>2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரைவு அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு. இரண்டு அலுவலக மேசைகள் மற்றும் ஒரு மேசைக் கணனியின் பெறுமதிகளை நடைமுறையல்லாத சொத்துகளின் கீழ் மீளவகைப்படுத்தியுள்ளோம்.<br><br>இந்த சொத்துக்கள் தற்போது 2023.12.31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன, அவை 2023.12.31 இல் உள்ளவாறான | கணக்காளர் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் உடன் இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 08 இன் பிரகாரம் மீளாய்வாண்டுக்காக ஒருகொடவத்தை அம்பத்தலே வீதிக்கு செலுத்தப்பட வேண்டிய நட்டஈடு மற்றும் வட்டிக்கு நிதியேற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை. நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 3 வீதிகளுக்கு செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகை ரூபா 139.86 மில்லியன் ஆகும். எனினும், 2024 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் மாத்திரம் ரூபா 202.31 மில்லியன் நட்டஈடு முன்னைய ஆண்டிற்காக செலுத்தப்பட்டுள்ளது. எனவே ரூபா 62.45 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், 2024 ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களுக்கு மாத்திரம், ரூபா 19.07 மில்லியன் பெறுமதியான 34 உறுதிச்சீட்டுக்கள் பணம் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனவே, நிதிக்கூற்றுக்களில் செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகை குறைத்துக் காட்டப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | 81.52 | 2023 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது 2023 .12.31 வரை பிரதேச செயலகங்களால் உறுதிச்சீட்டுக்கள் முழுமையாக இறுதி செய்யப்படாததால், ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதி தொடர்பான அனைத்து நட்டஈடுகள் மற்றும் வட்டிகளை சரியாக இனங்காண முடியவில்லை. எனினும் எதிர்காலத்தில் நட்டஈடு மற்றும் வட்டிக்கான ஏற்பாடுகளை சரியாக செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் உடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஈ) | செயற்திட்டத்திற்கு எதிரான நீதிமன்ற வழக்குகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 08 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | - | எதிர்கால நிதிக்கூற்றுக்களில் செயற்திட்டத்திற்கு எதிரான நீதிமன்ற வழக்குகளை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் கணக்காளர் எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் உடன் இணங்குவதை உறுதிப்படுத்த வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | செயற்பாடு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம் | கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| ஒருகொடவத் வீதி தை- அம்பத்தளை வீதி (நிலை-01) | நிர்மாணம் | 100% | 98% | உரிய வீதிகளின் உண்மையான முன்னேற்றம் திட்டமிடப்பட்ட முன்னேற்றத்திற்குப் பின்தங்கியிருந்தது. | ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல், பயன்பாட்டு இடநகர்வு (utility shifting) தாமதம் மற்றும் காணி சுவீகரிப்பு தாமதம். |
| (நிலை-02) | | 100% | 94% | | |

**முகாமைத்துவத்தின் பதில்** முக்கியமாக NWS&DB நீர் குழாய் பதித்தல் மற்றும் காணி கையகப்படுத்துவதில் தாமதம் காரணமாக நிர்மாணம் தாமதமாகியது. மேலும், தொடக்க பயன்பாட்டு இடநகர்வு தாமதங்களும் முன்னேற்றத்திற்கு பங்களிக்கின்றன.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** வேலை நிகழ்ச்சித்திட்டம் காலத்திற்கு காலம் திருத்தப்பட வேண்டும். மேலும் PMU இன் தேவையான அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் தேவையற்ற தாமதத்தைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 96.76 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை அறவிடாமல் ஒருகொடவத்தை - அம்பத்தலே வீதியின் (நிலை II) ஒப்பந்ததாரருக்கு 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 83.6 மில்லியன் நிறுத்திவைத்தல் பணம் விடுவிக்கப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் வேலை ஆரம்பிப்பு மற்பண மீதியை அறவிடாமல் முழு நிறுத்திவைத்தல் பணத்தையும் விடுவிப்பது தொடர்பான காரணங்கள் கணக்காய்வுக்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், குறித்த ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்ட வீதிப் பணிகள் 2024 மார்ச் வரையிலும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. மேலும், முற்பண கொடுப்பனவு உத்தரவாதத்தின் செல்லுபடியாகும் காலம் 2024 ஏப்ரல் | இணங்கப்பட்டது. கொடுக்கப்பட்ட பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் வலிதான வங்கி உத்தரவாதத்திற்கு எதிராக பிடித்துவைத்தல் பணம் விடுவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த உடன்படிக்கையில் கொடுக்கப்பட்ட சூத்திரத்தின் பிரகாரம் முற்பண கொடுப்பனவின் அறவீடு மேற்கொள்ளப்படுகிறது. மேலும் மேற்படி இரண்டு நடவடிக்கைகளுக்கும் இடையே எந்த தொடர்பும் காணப்படவில்லை. 2024.02.29 இல் உள்ளவாறு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய மிகுதி முற்பண கொடுப்பனவு ரூபா 58.3 மில்லியன் ஆகும்.<br><br>நீர் கசிவு காரணமாக வீதிப் பணிகள் பூர்த்தி செய்யப்படாததுடன் தற்போதுள்ள | நிறுத்திவைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு முன்னர் பணியின் முழுமைத்தன்மையை செயற்திட்ட பணிப்பாளர் உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 30 அளவில் காலாவதியாகின்றமையும் அவதானிக்கப்பட்டது. | ஒரு குழாய் வெல்லம்பிட்டி சந்தி வரை செயற்படுகிறதுடன் வெல்லம்பிட்டிக்கு அப்பால் (ஒருகொடவத்தை முனை) 03 குழாய்கள் செயற்பட்டு வருகின்றன.<br><br>முற்பண கொடுப்பனவிற்கான செல்லுபடியாகும் காலம் 2024.03.28 இல் ஒப்பந்ததாரர் M/s ருடவே பிறதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டால் நீடிக்கப்பட்டது. | |
| (ஆ) | ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் (FIDIC- 1999) 4.2 ஆம் இலக்க உட்பிரிவின் பிரகாரம், ஒப்பந்ததாரர் தனது சொந்த செலவில் செயலாற்றல் பிணையை பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும், செயலாற்றல் பிணைக்கான கிரயத்திற்காக செயற்திட்டத்தினால் ரூபா 7.39 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த நிபந்தனைகளின் (COC) 4.2 ஆம் உட்பிரிவின் பிரகாரம் கேள்விக்கான பின்னிணைப்பில் தொகை மற்றும் நாணயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தால், ஒப்பந்ததாரர் தனது சொந்த செலவில் செயலாற்றல் பிணையை பெற்றுக்கொள்ள வேண்டும் என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.<br>மேற்கூறியவற்றிற்கு முரணாக, ஒருகொடவத்தை – அம்பத்தலே நிலை I இற்காக வெளியிடப்பட்ட கேள்வி ஆவணங்களின் கேள்விக்கான பின்னிணைப்பில் தொகை குறிப்பிடப்படவில்லை. இந்த சூழ்நிலையில் 4.2 ஆம் உட்பிரிவு கேள்விக்கான பின்னிணைப்பில் ஒரு தொகை குறிப்பிடப்படவில்லை என்றால் இந்த உட்பிரிவு பொருந்தாது என மேலும் குறிப்பிட்டது, எனவே, செயலாற்றல் பிணைக்கான செலுத்தும் உருப்படியொன்று வழங்கப்பட்டுள்ளது. | கேள்வி ஆவணங்களை மதிப்பிடும் போது இந்த விடயங்களை கருத்தில் கொள்வதற்காக PMU ஆனது TEC இற்கு தெரிவிக்க வேண்டும். |
| (இ) | ஒப்பந்தத்திற்கான விபரக்குறிப்புக்களின் 128 மற்றும் 129 உட்பிரிவுகளின் பிரகாரம் ஆய்வுக்கூடம், உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் ஆகியவை கையேற்பு சான்றுதலை வழங்கும் திகதியில் ஒப்பந்ததாரருக்கு மீளளிக்கப்பட வேண்டியதுடன் அளவை உபகரணங்கள் ஒப்பந்தத்தின் இறுதியில் ஒப்பந்ததாரரிடம் மீளளிக்கப்பட வேண்டும். எனினும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கள ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் அளவை உபகரணங்களுக்காக செயற்திட்டமானது ரூபா 15.66 மில்லியன் தொகையை மொத்தமாக | இணங்கப்பட்டது.<br>வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் (RDA) உள்ள ஆய்வுகூடம் மற்றும் அளவை உபகரணங்கள் தேவைகளை விட அதிகமாக இருப்பதால் புதிய உபகரணங்களைப் பெறுவது செயற்திட்ட முடிவின் மூலம் தேவையற்றதாகும். எனவே, 128 & 129 ஆம் உட்பிரிவு குறிப்பிட்ட விபரக்குறிப்புகள் (தொழில்தருநரின் தேவை) தொழில்தருநரின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப | கேள்வி ஆவணங்களை மதிப்பிடும் போது இந்த விடயங்களை கருத்தில் கொள்வதற்காக PMU ஆனது TEC இற்கு தெரிவிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தியுள்ளது. சாதகமற்ற ஒப்பந்த நிலைமைகள் ஒப்பந்ததாரர்களுக்கு மேலதிக நலன்களை ஏற்படுத்தக்கூடும் என்பது அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்தத்தில் இணைக்கப்பட்டுள்ளன. | |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொழில்தருநர்/ பொறியியலாளருக்கான அலுவலகம் மற்றும் வீடு ஆகியவற்றுக்கான மொத்தத் தொகையாக ரூபா 36.56 மில்லியன் தொகை செயற்திட்டத்தால் செலுத்தப்பட்டுள்ளது, மேலும் செயற்திட்டத்தால் பொறியியலாளர் மதிப்பீட்டை விஞ்சி ரூபா 8.36 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. | ஒப்பந்ததாரரின் கேள்வி விலைவிகிதம் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு பெறுமதியின் அடிப்படையில் இருக்கும். எனினும், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் செயற்திட்டத்தின் முடிவில் தொழில்தருநரின் சொத்தாக உள்ளதால் எதிர்கால ஒப்பந்தங்களின் கேள்வி விபரக்குறிப்பை மாற்றுவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | கேள்வி ஆவணங்களை மதிப்பிடும் போது இந்த விடயங்களை கருத்தில் கொள்வதற்காக PMU ஆனது TEC இற்கு தெரிவிக்க வேண்டும். |
| (உ) | 2023 திசெம்பர் 31 இன் இறுதியில் கடைசி IPC இன் பிரகாரம் செயற்திட்டம் முறையான அங்கீகாரம் இல்லாமல் BOQ ஐ விஞ்சி ரூபா 144.4 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது. பூர்வாங்க மற்றும் பொது உருப்படிகளின் கிரயம், ஒப்பந்தத்திற்கு மேலதிக செலவை ஏற்படுத்தும் அத்தகைய தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை (NWS&DB) வீதிப் பணிகளுக்கு இணையாக செயற்திட்ட வீதியில் புதிய குழாய் பதிக்கும் பணியை தொடங்கியுள்ளது. குழாய் பதிக்கும் பணி தாமதமானதுடன், வீதி பணிகளும் தாமதமானது. எனவே, பூர்வாங்க மற்றும் பொது உருப்படிகளின் கொடுப்பனவு அதற்கிணங்க விஞ்சப்பட்டுள்ளது. | வேலை நிகழ்ச்சித்திட்டம் காலத்திற்கு காலம் திருத்தப்பட வேண்டியதுடன் PMU இன் தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் தேவையற்ற செலவினங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதியின் சிவில் வேலைகளுக்கான இரண்டு பொதிகளின் BOQ இன் பிரகாரம் 221 செலுத்தும் உருப்படிகளுக்கு ரூபா 607.36 மில்லியன் மதிப்பிடப்பட்டுள்ளது, செயற்திட்டத்தின் முடிவில் 2023 திசெம்பர் மாதத்திற்காக செலுத்தப்பட்ட கடைசி இடைக்காலச் சான்றிதழ் வரை அந்த உருப்படிகளுக்கு செயற்திட்டத்தால் கொடுப்பனவு எதுவும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே இந்த செலுத்தும் உருப்படிகளின் மதிப்பீடு கணக்காய்வில் சிக்கலாக இருந்தது. | 107 வேலை உருப்படிகளில் சில உருப்படிகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை மேலும் சில வேலை உருப்படிகள் தளத்தின் நிலைமை மற்றும் நிதி நெருக்கடி காரணமாக ஒப்பந்தத்தில் இருந்து நீக்கப்பட்டன. | BOQ ஐ அங்கீகரிப்பதற்கு முன்னர் தேவையற்ற BOQ உருப்படிகளைத் தவிர்ப்பதை செயற்திட்ட பணிப்பாளர் உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | வீதியின் வடிவமைப்பின் படி பொறியியலாளரால் செலுத்தும் உருப்படிகளுக்கான அளவு சரியாக அளவிடப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் BOQ இல் சேர்க்கப்பட்டுள்ள அளவு உடன்படிக்கையில் ஒப்பந்ததாரருடன் இணங்கப்பட்டிருந்தது. அதற்கு முரணாக, முறையான அங்கீகாரமின்றி ஒப்பந்ததாரருக்கு மேலதிக அளவுகளுக்காக ரூபா 194.6 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. இது கணக்காய்வில் கேள்விக்குறியாக உள்ளது மேலும் இந்த மேலதிக கிரயம் ஒப்பந்தத் தொகையை அதிகரிக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. | வழங்கப்பட்ட தளத்தின் நிபந்தனையின் பிரகாரம், பொறியியலாளர்களின் பரிந்துரையின் அடிப்படையில் BOQ அளவுகள் அதிகரிக்கப்பட்டு, அதற்கிணங்க BOQ ஐ திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | BOQ ஐ அங்கீகரிப்பதற்கு முன்னர் தேவையற்ற BOQ உருப்படிகளைத் தவிர்ப்பதை செயற்திட்ட பணிப்பாளர் உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஏ) | வீதியின் வடிவமைப்பின் பிரகாரம் பொறியியலாளரால் முறையான அளவீடுகளுடன் பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் ஒருகொடவத்தை அம்பத்தலே வீதியை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்ததாரருக்கு ரூபா 208 மில்லியன் தொகையான முரண் கட்டளைகள் செலுத்தப்பட்டுள்ளன. இந்த முரண்கள் 2024 மார்ச் 31 வரை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் இது கணக்காய்வில் பிரச்சனைக்குரியதொன்றாக இருந்தது. | உருப்படிகள் (vi) மற்றும் (vii) இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு, பணி நிறைவேற்றலின் போது அளவுகள் மற்றும் புதிய வேலை உருப்படிகள் சேர்க்கப்பட்டுள்ளன, மேலும் பொறியியலாளரால் பரிந்துரைக்கப்பட்டவாறு முரண் கட்டளைகள் வழங்கப்பட்டு தொழில்தருநரின் அங்கீகாரத்திற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | வேலை நிகழ்ச்சித்திட்டம் காலத்திற்கு காலம் திருத்தப்பட வேண்டியதுடன் PMU இன் தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ஐ) | கடைசி ஆலோசகர் அறிக்கையின் பிரகாரம், 280 எண்ணிக்கையிலான இறுக்கப்படுத்தல் சோதனைகள் தோல்வியடைந்தன, மேலும் 6 எண்ணிக்கையான அஸ்பால்ற் கொங்கிறீட் (தடிமன் மற்றும் அடர்த்தி) தோல்வியடைந்தன. அதன் பிரகாரம் 272 எண்ணிக்கையிலான இறுப்படுத்தல் மீள்சோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் முடிவுகள் ஆலோசகர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனவே வீதியின் தர உறுதிப்பாடு கணக்காய்வில் கேள்விக்குறியாக உள்ளது. | தோல்வியுற்ற இறுக்கப்படுத்தல் சோதனைகள் மீண்டும் மேற்கொள்ளப்பட்டு தேவைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. பொறியியலாளரின் விளக்கமளித்தலின் பிரகாரம் அஸ்பால்ற் கொங்கிறீட்டிற்கான 6 சோதனைகளின் காற்று வெற்றிட விகிதம் (A/V) விபரக்குறிப்பிலிருந்து ஓரளவு விலகி, கடந்த இரண்டு ஆண்டுகளாக கண்காணிக்கப்பட்டதுடன் வீதி மேற்பரப்பில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தவில்லை. | கள பரீட்சிப்பின் போது பதிவு உள்ளீடுகளை பொறியியலாளர்கள் வைத்திருக்க வேண்டியதுடன் அதற்கிணங்க கொடுப்பனவு கழிக்கப்பட வேண்டும். |
| (ஒ) | கொழும்பு தேசிய நெடுஞ்சாலைகள் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கை ஐ.அ.டொலர் 50 மில்லியனிற்கு 2013 யூன் 10 இல் கைச்சாத்திடப்பட்டதுடன் 2017 திசெம்பர் 31 இல் காலாவதியானது. எனினும், | இணங்கப்பட்டது. கடன் நீடிப்பை பெற்றுக்கொள்வதற்கான அங்கீகாரம் 2024.03.29 இல் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடமிருந்து | செயற்திட்ட செயற்பாடுகளை விரைவுபடுத்துவதற்கு செயற்திட்ட பணிப்பாளர் தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளில் தாமதம் காரணமாக, கடன் இறுதி திகதி 2024 பெப்ரவரி 29 வரை பல முறை நிதியளிப்பு முகவரால் நீடிக்கப்பட்டிருந்தது.<br><br>கடன் செல்லுபடியாகும் காலத்தை 2026 மே 12 வரை நீடிப்பதற்கு அமைச்சரவை முடிவு பெறப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2024 மார்ச் 25 வரை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பெறப்பட்டது. | நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (ஓ) | 06 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட கொழும்பு மாவட்டத்தில் உள்ள 12 தேசிய வீதிகளின் 63.72 கிலோமீற்றரின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு மற்றும் நாரஹேன்பிட்டி - நுகேகொட வீதியின் பாலம் இல. 2/1 ஆகியவற்றை செயற்திட்டப் பணிகளின் நோக்கெல்லை கொண்டுள்ளது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 11 இல் ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட போதிலும், 06 தேசிய வீதிகளின் புனரமைப்பு பணிகள் மற்றும் பாலத்தின் மேம்பாடு ஆகியவை 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.<br>இந்த வீதியுடன் இணைக்கப்பட்டிருந்த பஞ்சசர மாவத்தை என பெயரிடப்பட்ட வீதி எவ்வித அங்கீகாரமும் இன்றி ஒப்பந்தத்திற்கான முரணின் கீழ் புனரமைக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாணத்திற்கான கிரயம் ரூபா 30.85 மில்லியன் ஆகும். மேலும் இது செயற்திட்ட நோக்கங்களுக்கு புறம்பானது என்பது அவதானிக்கப்பட்டது. ரூபா 30.85 மில்லியன் தொகையான இந்த முரண் கட்டளை 2022 திசெம்பர் 19 இல் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரிடம் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2024 மார்ச் 31 வரை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்படவில்லை.<br>2022.12.29 இல் செயலாளரால் (MOH&H) முக்கியமாக பஞ்சசர மாவத்தை மேம்பாடு அங்கீகரிக்கப்பட்டது.<br><u>மஹரகம – பிலியந்தலை வீதி</u><br>03 பல்கலைக்கழகங்களில் நிபுணத்துவம் பெற்ற நிபுணர் குழுவின் கேள்வி மதிப்பீடு மற்றும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட குழு அறிக்கையை மீள்பரிசீலனை செய்வதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. | செயற்திட்ட பணிப்பாளர் செயற்திட்டத்தின் நோக்கெல்லையுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | ஒருகொடவத்தை அம்பத்தலே வீதி நிலை I இன் புனரமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்தம் 2017 யூலை 01 இல் ரூபா 1,528 மில்லியன் செலவில் ஆரம்பிக்கப்பட்டு 2019 யூன் 30 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. செயற்திட்டம் ஒப்பந்ததாரரின் செயலாற்றலை கருத்தில் கொள்ளாமல் 2023 ஆகஸ்ட் 28 வரை ஒப்பந்த காலத்தை 10 தடவைகள் நீடித்திருந்தது. கடைசி முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2023 மார்ச் 31 இற்குப் பின்னர் EOT கோரப்பட்டிருக்கவில்லை.<br><br>ஒருகொடவத்தை அம்பத்தலே வீதியின் நிலை II இன் புனரமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்தம் 2019 ஒக்தோபர் 21 இல் ரூபா 1,943 மில்லியன் செலவில் ஆரம்பிக்கப்பட்டு 2021 ஒக்தோபர் 20 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தினால் ஒப்பந்த காலம் 2023 செப்தெம்பர் 09 வரை 04 முறை நீடிக்கப்பட்டிருந்தது. கடந்த முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ரூபா 55.25 மில்லியன் தொகையான இடைக்கால உரிமைக்கோரல் ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 இற்குப் பின்னர் உரிமைகோரல் மதிப்பீட்டின் கீழ் உள்ளதுடன் EOT கோரப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. இது கணக்காய்வில் பிரச்சனைக்குரியதொன்றாக இருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனை இல. 8.7 இன் பிரகாரம் ஒப்பந்தங்களின் தாமதத்திற்கு ஒப்பந்ததாரரிடமிருந்து தாமத சேதங்கள் (LD) அறவிடப்பட வேண்டும். நிலை I மற்றும் II முறையே 125 நாட்கள் மற்றும் 113 நாட்கள் தாமதமாகியிருந்த போதிலும், செயற்திட்டத்தால் ரூபா 347.19 மில்லியன் தொகையான LD அறவிடப்பட்டிருக்கவில்லை. இந்த நிலைக்கு செயற்திட்ட பணிப்பாளர் பொறுப்பானவராவர். | <u>ஒருகொடவத்தை – அம்பத்தலே வீதி – நிலை I</u><br>முக்கியமாக NWS&DB நீர் குழாய் பதித்தல் மற்றும் காணி கையகப்படுத்துவதில் தாமதம் காரணமாக நிர்மாணம் தாமதமாகியது. மேலும், தொடக்க பயன்பாட்டு இடநகர்வு தாமதங்களும் முன்னேற்றத்திற்கு பங்களிக்கின்றன.<br>எனவே, ஒப்பந்ததாரர்களின் செயலாற்றல் முக்கியமாக நிர்மாண தாமதத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தாது.<br><u>ஒருகொடவத்தை – அம்பத்தலே வீதி – நிலை II</u><br>அங்கீகாரத்திற்காக RDA இற்கு EOT கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.<br>மேலே விளக்கமளிக்கப்பட்டுள்ளவாறு, செயற்திட்ட தாமதத்திற்கு ஒப்பந்ததாரரை முழுமையாகப் பொறுப்பாக்க முடியாது, அதன் பிரகாரம் LD ஐப் பயன்படுத்த முடியாது. | வேலை நிகழ்ச்சித்திட்டம் காலத்திற்கு காலம் திருத்தப்பட வேண்டியதுடன் PMU இன் தேவையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (க) | ICTAD – 2009 இல் வெளியிடப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்களின் நிர்மாணம் மற்றும் பராமரிப்புக்கான தரநிலை விபரக்குறிப்புக்கு முரணாக, மேற்படி பெறுகைக்காக மேலதிகமாக பொறியியலாளர் மதிப்பீட்டில் ரூபா 83.3 மில்லியன் தொகையான ஆறு செலுத்தும் உருப்படிகள் சேர்க்கப்பட்டுள்ளன. | ICTAD - 2009 ஆல் வெளியிடப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்களின் நிர்மாணம் மற்றும் பராமரிப்புக்கான தரநிலை விபரக்குறிப்பு அனைத்து நிர்மாண நடவடிக்கைகளையும் உள்ளடக்காததுடன் தளத்தின் நிலைமையின் பிரகாரம் மேலதிக உருப்படிகள் சேர்க்கப்படுகின்றன. | செயற்திட்ட பணிப்பாளர் மேலதிக ஊழியர் தேவைப்பாட்டின் அவசியத்தை உறுதிப்படுத்தி திரும்பப் பெறப்பட வேண்டியதுடன் காரணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். |

**3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் உட்பிரிவு இல. 4.1 (6). | பெறுகை திட்டம் வரிசை அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் வெளிநாட்டு நிதியளிப்பு முகவரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு ஏற்ப பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காதமையும் அவதானிக்கப்பட்டது. | விடயங்களைக் கடைப்பிடிக்குமாறு PMU இற்கு அறிவுறுத்தப்படுகிறது. | பெறுகை திட்டத்தை தயாரித்து அதற்கு அமைச்சிடம் இருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு PMU நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் உட்பிரிவு இல. 7.9.2 | குறைந்த மதிப்பிடப்பட்ட பதிலளிக்கக்கூடிய கேள்வியானது பொறியியலாளர் மதிப்பீடுகளை கணிசமான வித்தியாசத்தில் மீறினால், பெறுகை நிறுவனம் புதிய கேள்விகளை கருத்தில் கொள்ளும் அல்லது திருப்திகரமான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கு குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட கேள்விதாரருடன் பேச்சுவார்த்தை நடாத்தலாம். மேற்படி பெறுகை வழிகாட்டல்களுக்கு முரணாக | 2021 ஆம் ஆண்டின் HSR விகிதங்களின் அடிப்படையில் மேற்படி செயற்திட்டத்தின் பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. | TEC ஆல் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பிரகாரம் விலை உயர்வுகள் கணிப்பிடப்படுகின்றன என்பதை PMU உறுதிப்படுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொறியியலாளர் மதிப்பீட்டை 63% ஆல் விஞ்சியிருந்த மஹரகம பிலியந்தலை வீதியின் (பிரிவு I) ரூபா 794.49 மில்லியன் பெறுமதியான நிர்மாணப்பணிகள் வழங்கப்பட்டிருந்தன. | | |
| (இ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் உட்பிரிவு இல. 2.6.1 | TEC இன் தலைவர் அல்லது அவரது பிரதிநிதி கேள்விக்கு முன்னரான கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் (TEC) உறுப்பினராக ஒரு பொறியியலாளர் TEC தலைவரின் பிரதிநிதியாக கேள்விக்கு முன்னரான கூட்டத்தில் கலந்து கொண்டார். | பெறுகை வழிகாட்டியுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் உட்பிரிவு இல. 2.12 | மேற்படி TEC இன் உறுப்பினரொருவர் அதன் முதலாவது கூட்டத்தில் பிரகடனத்தில் கையெழுத்திட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. எதிர்கால பெறுகை பணிகளில் இதனை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டியுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 காணி சுவீகரிப்பு தொடர்பான சிக்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கிடைத்த தகவலின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக 992 அரச காணித்துண்டுகள் உட்பட 5,710 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நட்டஈடுகளை தீர்ப்பனவு செய்வதில் உள்ள தாமதம் காரணமாக ரூபா 2,658 மில்லியன் வட்டியுடன் சேர்த்து ரூபா 12,176 மில்லியன் தொகையான நட்டஈடு 4,683 காணித்துண்டுகளிற்காக செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டுள்ளது. எனினும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் 05 காணித்துண்டுகள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், இது செயற்திட்டத்தின் செயலாற்றலை மோசமாகப் பாதிக்கலாம். | கையகப்படுத்தப்பட வேண்டிய காணித்துண்டுகள் 5666 ஆகும், இதில் 992 அரச காணிகள் உள்ளடங்குகிறது. எனினும், 2023.12.31 இல் உள்ளவாறு 44 பிரிவின் கீழ் 361 காணித்துண்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.<br><br>நட்டஈட்டு கொடுப்பனவின் பின்னர் காணியை கையகப்படுத்தி, நிர்மாணத்தை தொடரலாம். எனினும், காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் நட்டஈட்டுக் கொடுப்பனவின் பின்னர் காணி பதிவு தொடங்கியது.<br><br>எனவே, செயற்திட்டச் செயலாற்றலிற்காக 44 ஆம் பிரிவு பதிவு செயற்படுத்தப்படவில்லை. | காணி கையகப்படுத்தும் செயன்முறை முறையான செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மேலதிக செலவினத்தைச் செலுத்துவதற்கு மிகுதியாக உள்ள கடனுக்கான நிதியேற்பாடு எதுவும் இல்லாததால், 2023 மே 12 இல் மீளாய்வாண்டில் பெறப்பட்ட GOSL நிதியிலிருந்து ரூபா 24.24 மில்லியன் தொகை நீடிப்புச் செலவாகச் செலுத்தப்பட்டுள்ளது.<br>நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பு இல. 01 இன் பிரகாரம் GOSL நிதியிலிருந்து நட்டஈடு மற்றும் வட்டி மாத்திரமே செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக GOSL நிதியில் இருந்து பெறப்பட்ட ரூபா 24.24 மில்லியன் காணி கையகப்படுத்துதலுக்கான நட்டஈட்டை செலுத்துவதற்கு முறையான அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | GOSL நிதியானது நட்டஈடு மற்றும் வட்டி செலுத்துவதற்காக மாத்திரமே வழங்கப்பட்டதென தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. GOSL நிதிகள் இரண்டு வாக்குகளின் கீழ் ஒதுக்கப்படுகின்றன: 117-2-4-32-2105 (17) இன் கீழ் வழங்கப்பட்ட நிதிகள் நட்டஈடு மற்றும் வட்டி செலுத்துதலுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன, அதே நேரம் 117-2-4-32-2506 (17) இன் கீழ் வழங்கப்படும் நிதி PMU செலவினங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி தொடர்பான உள்நாட்டு நிதிகளின் கீழான நிர்மாண செலவுகளை உள்ளடக்கியது.<br>மேலும், நீடிப்புச் செலவுகளின் கொடுப்பனவிற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களிற்கு கணக்காளர் பொறுப்பேற்க வேண்டும். |

## 3.6 செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் தாமதம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| பிலியந்தலை மஹரகம வீதியின் மொத்த நீளம் 5.8 கிலோமீற்றர் ஆக உள்ளதுடன் மூன்று வீதிப் பிரிவுகளாக மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 2023 திசெம்பர் 07 இல் 1.8 கிலோமீற்றர் நீளமான வீதியின் பிரிவு ஒன்று வழங்கப்பட்டது. எனினும், ஒப்பந்தம் வழங்குவதை எதிர்த்து கேள்விதாரர் ஒருவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் காரணமாக பணிகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இது செயற்திட்டத்தின் செயலாற்றலை மோசமாக பாதித்தது. | காணி சுவீகரிப்பு தாமதம் காரணமாக மஹரகம - பிலியந்தலை வீதி 03 ஒப்பந்தங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது.<br>LAQ பணிகள் முழுவதுமாக பூர்த்தியடையும் வரை நிர்மாண பணிகளை தொடங்குவதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது. வீதியின் பிரிவு I (0+000கிமீ முதல் 1+800கிமீ வரை) நிர்மாணத்திற்காக வழங்கப்பட்டதுடன் கேள்விதாரர் சமர்ப்பித்த FR வழக்கின் காரணமாக பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. | தாமதம் மற்றும் செலவைக் குறைப்பதற்கு PMU தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

## 3.7 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் முறையே ரூபா 900 மில்லியன் மற்றும் ரூபா 75 மில்லியன் (வாக்குப்பண இல. 117-2-4-32-2506-0/17) தொகையான ஒதுக்கீடு முறையே வெளிநாட்டு கடன் மற்றும் GOSL கூறுகளின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் மோசமான முன்னேற்றம் காரணமாக 20 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 179 மில்லியன் வெளிநாட்டு கடன் ஒதுக்கீடு மற்றும் 20 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 15 மில்லியன் GOSL ஒதுக்கீடு செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது.<br><br>வாக்குப்பணம் 117—4-32-2506(12) இன் கீழ் 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒதுக்கீடு ரூபா 900 மில்லியனாகும். இதில் மஹரகம - பிலியந்தலை வீதிக்கான செலவும் உள்ளடங்குகிறது. நீதிமன்ற வழக்கின் காரணமாக இந்த செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன் எந்தப் பணவளிப்பும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் 117-2-4-32-2506(12) இன் கீழ் போதுமான கட்டுநிதி பெறப்படாததுடன் 117-2-4-32-2506(17) இன் கீழ் ரூபா 15 மில்லியன் பயன்படுத்தப்பட முடியாதிருந்தது. | கடன் நிதியை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு PMU நடவடிக்கையை எடுக்க வேண்டும். |